தலைப்பு 255 – கொழும்பு மாவட்ட செயலகம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 255 - கொழும்பு மாவட்ட செயலகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கொழும்பு மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூலை 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கொழும்பு மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் கொழும்பு மாவட்ட செயலகத்தினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை கொழும்பு மாவட்ட செயலகத்தினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய

பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) நிதியல்லாச் சொத்துக்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்தரைகள்	பரிந்துரைகள்
(i)	மீளாய்வாண்டின் மாவட்ட செயலாளரின் உத்தியோகபூர்வ இல்லத்தின் பாதுகாப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,991,277 தொகையும், மாவட்ட செயலக கட்டிட தொகுதியின் அரசாங்க அதிபர் உத்தியோகபூர்வ அறைக் கட்டிடத்தில் CCTV கெமரா பொருத்துவதற்காக ரூபா 162,375 மற்றும் தெஹிவளை பிரதேச செயலகத்தை கூறு பிரிப்பதற்காக (அலுமினிய பார்டிஷன்) உள்ளடக்கிய ஏனைய மூலதன செலவின விடயங்களுக்காக ரூபா 20,655,555 தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 22,809,207 மூலதன செலவினம் நிதிக்கூற்றுக்களில் நிதியல்லாச் சொத்துக்களின் கீழ் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை.	கணக்காய்வு அவதானிப்புக்களில் சுட்டிக் காட்டப்படுகின்ற விடயங்களையும் கவனத்தில் கொண்டு இவ்வாறான சொத்துக்களையும் மீள் மதிப்பீடு செய்யும் போது கவனத்தில் கொள்வதற்கும் அந்த மீள் மதிப்பீட்டுப் பெறுமதியை கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடுகின்றோம்.	மூலதன செலவினங்களை சரியான செலவின விடயத்தில் கணக்கீடு செய்து அப் பெறுமதி நிதியல்லாச் சொத்துக்களாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும்.
(ii)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 பிரதேச செயலகங்களுக்கு உரிய சேவைத் தொகுதி / கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களில் 50 கட்டிடங்கள் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	கணக்கீடு செய்யப்படாத காணி மற்றும் கட்டிடங்களை இனங்காணப்பட்டுள்ளதுடன் அதற்குரிய மதிப்பீடு 2025 மார்ச் மாதத்தின் போது சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது என தயவுடன் அறியத் தருகின்றோம்.	மதிப்பீடு செய்யப்படாத கட்டிடங்களை இனங்கண்டு விரைவாக மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	சதுர அடி 13,446 பரப்பளவை உடைய கொலன்னாவ பிரதேச செயலக அலுவலக கட்டிடப் பெறுமதி 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாது இருந்த போதும் 2021 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் மாத்திரம் 02 மூலதன செலவின விடயங்களின் மூலம் ரூபா 12,466,438 செலவினம் செய்யப்பட்டிருந்தது.	கணக்காய்வு அவதானிப்புக்களில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பிரகாரம் நிதியல்லாச் சொத்துக்களின் கீழ் கொலன்னாவ பிரதேச செயலகத்திற்குரிய கட்டிடத்தின் பெறுமதி கணக்கீடு செய்யப்படும் என குறிப்பிடுகின்றோம்.	கட்டிடங்களின் பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(iv)	மாவட்ட செயலகங்களில் காணப்படுகின்ற 51 வாகனங்களுக்கு இடையே 05 வாகனங்களின் உரித்து ஏனைய அமைச்சுக்களுக்கு சொந்தமாக இருந்ததுடன் 46 வாகனங்களின் உரித்து மாவட்ட செயலகத்திற்கு சொந்தமாகக் காணப்படுவதாகக் காண்பிக்கப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 180,644,288 பெறுதியான 42 வாகனங்களுக்கு உரியதாக இனங்காணப்படாமையால் 04 வாகனங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை.	சனாதிபதி செயலகத்தில் இருந்து பெறப்பட்ட 02 வாகனங்களின் உரித்து கையேற்கப்பட்டுள்ளதுடன் ஏனைய வாகனங்களின் உரித்தும் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மாவட்ட செயலகத்திற்கு உரிய வாகனங்களின் உரித்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் உரித்து சொந்தமான சகல வாகனங்களையும் மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும்.

(ஆ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்தரைகள்	பரிந்துரைகள்
(i)	2024 இன் நிதிக்கூற்றுக்களில் நிதியல்லாச் சொத்துக்களில் 42 போக்குவரத்து உதிரிப்பாகங்களுக்கு உரிய ரூபா 180,644,288 மீதிக்காக சமர்ப்பிக்கப்பட்ட சிகாஸ் கணனி தரவு அறிக்கையில் உரிய போக்குவரத்து துணைப் பகங்கள் ஒன்றுக்கொன்று தனித்தனியாக இனங்காணக் கூடிய வகையில் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு உரிய கணக்குப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் அறிக்கையிலும் 34 போக்குவரத்து துணைப்பாகங்களுக்கு உரிய தகவல் மாத்திரம் உள்ளடக்கப்பட்டதுடன் அந்த போக்குவரத்து துணைப்பாகங்களினதும் பெறுமதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முறையான பட்டோலை அல்லது மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு தவறியதன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 180,644,288 போக்குவரத்து துணைப் பாகங்களின் மீதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு போதியளவான கணக்காய்வு சான்றுகள் காணப்படவில்லை.	CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் தரவுகளை உள்ளடக்கும் போது ஆரம்ப ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு சொத்துக்கள் உள்ளடக்குதல் ஆரம்பிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்கள் ஏற்பட்டு இருந்தது. இது தொடர்பாக ஆரம்ப பதிவேடுகள் உரிய கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.	கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு முறையான எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்தரைகள்	பரிந்துரைகள்
(அ)	மூலதன மற்றும் மீண்டெழும் செலவின விடயங்கள் 32 இற்காக வழங்கப்பட்ட கூட்டு மொத்தமான ரூபா 1,343,569,420 தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 1,173,216,302 மாத்திரம் பயன்படுத்தப் பட்டமையால் சேமிப்பு ரூபா 170,353,118 ஆக இருந்ததுடன் அந்த சேமிப்பு தேறிய நிதியேற்பாட்டில் 08 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. ஆரம்ப மற்றும் குறைநிரப்பு மதிப்பீடு தயாரிக்கும் போது, நிதிப்பிரமாணம் 66/69 மாற்றல்கள் விண்ணப்பிக்கும் போது கவனத்தில் கொள்ள கூடிய சகல அளவு கோல்களும் தொடர்பாக போதியளவாக கவனத்தில் கொள்ளாமல் நிதியேற்பாடு கோரப்பட்டிருந்தது.	கணக்காய்வு அவதானிப்புக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதுடன் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்படும்.	பொருத்தமான மற்றும் சரியான மதிப்பீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடை முழுமையாக பயன் படுத்துவதற்காக முழுமையான வேலைத் திட்டம் ஒன்றும் ஈடுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்தரைகள்	பரிந்துரைகள்
(அ)	மாவட்ட செயலகத்தில் 06 செலவின விடயங்களுக்கு உரிய ரூபா 1,413,840 ஆன பொறுப்புக்கள் இனங்காணப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் பொறுப்புக்கள் அப் பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்வதுடன் இவ்வாறான நிலைமை ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுப்பதற்கும் நிதிப்பிரமாணம் 214 இற்கு உரிய பதிவேடுகளைப் பேணிச் செல்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.	உரிய பிரகாரம் பொறுப்புக்களை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்தரைகள்	பரிந்துரைகள்
(அ)	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுபாட்டிற்காக ஆக்க பூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை ஸ்தாபித்து பேணிச் செல்ல வேண்டி இருந்தமைக்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இந்த முறைமையின் ஆக்க பூர்வமான தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வை மேற்கொண்டு அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமாக கொண்டு செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டி இருக்குமாயின் அந்த மீளாய்வு எழுத்துமூலம் மேற்கொண்டு அதன் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டி இருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று ஒன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் இது தொடர்பாக கால ரீதியில் தகவல்களை கலந்துரையாடுதல் மற்றும் மீளாய்வு செய்தல் மேற்கொள்ளப்படுவதுடன் அதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துக் குழுக் கூட்டம், பிரதேச செயலாளர் மாதாந்த கூட்ட சந்தர்ப்பங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளது.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்தரைகள்	பரிந்துரைகள்
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 4.2.2, 4.2.4, 4.2.5, 4.4, 4.5, 4.6 மற்றும் 6.3 ஆம் பிரிவுகள்	ஓய்வு பெற்றுச் சென்ற 04 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 488,915 உம், வேலை நீக்கத்திற்கு உட்பட்ட மூன்று உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 86,946 உம், சேவையை விட்டுச் சென்ற 03 உத்தியோகத்தரிடம் இருந்து ரூபா 323,425 உம், மரணமடைந்த உத்தியோகத்தர்கள் இரண்டு பேர்களிடம் இருந்து ரூபா	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய கடன் ரூபா 2,952,648 மீதியில் 2025 மே 01 இல் உள்ளவாறு ரூபா 1.181,841 அறவிட வேண்டி இருந்தது.	கால ரீதியில் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காது இருந்த உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும், கடன் மீதியை அறவிடுதற்கும் விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		282,555 உம் ஆக 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 01 வருடம் முதல் 20 வருடங்களுக்கு மேலான காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற கூட்டுப் பெறுமதி ரூபா 1,181,841 நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.		
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை			
(i)	நிதிப்பிரமாணம் 177(2)	சேர்க்கப்படுகின்ற உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களில் அவர்களுக்கு கிடைக்கின்ற சகல பணத்தையும் இயலுமானவரை விரைவாக அல்லது ஒவ்வொரு வாரமும் ஆகக் குறைந்தது ஒரு தடவையேனும் உரிய அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டியிருந்த போதிலும் இனங்காணப்பட்ட அடையாள அட்டைக் கட்டணம், பிரதேச செயலகத்தின் காசாளர் பிரிவுக்கு சமர்ப்பிக்கும் போது மேற்கூறப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்ட 10 சந்தர்ப்பங்கள் கொழும்பு பிரதேச செயலகத்தில் காணப்பட்டது.	அவதானிப்புக்கள் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் களப் பரிசோதனையின் போது சேகரிக்கப்படுகின்ற இவ்வாறான நிதியை பிரதேச செயலகத்திற்கு வருகை தருகின்ற முதலாவது சந்தர்ப்பத்தின் போது நிதியை கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் கிடைக்கின்ற நிதி உரிய அலுவலகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	நிதிப்பிரமாணம் 394(இ)	செல்லுபடியான காசோலைகளின் பெறுமதி அலுவலகத்தில் கிடைக்கப் பெற்ற பணமாக கருதி குறித்துரைத்த கணக்கில் செலவு வைக்க வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் ரூபா 762,288 தொகை இரத்துச் செய்யப்பட்ட காசோலையின் பெறுமதி மூன்றாம் தரப்பினர் பொது வைப்புக் கணக்கில் 06 மாதம் - 32 மாத காலம் முடித்து வைக்கப்பட்டிருந்தது.	கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்வதுடன் இவ்வாறான தவறுகள் மீண்டும் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ)	தாபனவிதிக் கோவையின் XLIII ஆம் அத்தியாயத்தின் 13.2 ஆம் பிரிவு (திருத்தப்பட்ட)	2019 செப்தெம்பர் 30 ஆந் திகதிய இலக்கம் 30/2019 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் படி ஏதாவது திருத்தங்களுக்கு உட்படுத்த வேண்டுமாயின் அது தொடர்பாக இரண்டு மாத காலத்தின் போது ஆரம்ப விசாரணை ஒன்று நடாத்த வேண்டி இருந்தமை காண்பிக்கப் பட்டிருந்த போதிலும் 03 பிரதேச செயலகங்களில் இருந்த 05 உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஆரம்ப விசாரணை நடாத்துவதற்காக 04 மாதங்களுக்கும் 48 மாதங்களுக்கும் இடையிலான கால எல்லை எடுத்து இருந்தது.	கணக்காய்வு அவதானிப்புக்களில் கவனம் செலுத்தி நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கும், உரிய ஆரம்ப விசாரணைகளை விரைவாக மேற்கொள்ளுமாறு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்படும்.	தாபன விதிக் கோவை மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் ஆரம்ப விசாரணைகளை விரைவாக நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	2008 பெப்ரவரி 06 ஆந் திகதி இலக்கம் 05/2008 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கை	மாவட்ட செயலகம் மற்றும் ஒவ்வொரு பிரதேச செயலகங்களினாலும் பிரஜைகள் அல்லது சேவை பயனாளிகள் விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் சேவைகளை நாளது வரையாக்குதல், பின்தொடர் நடவடிக்கைகள், மதிப்பீடுகள் மற்றும் அபிவிருத்தி செய்தல் தொடர்பான மேற்கூறப்பட்ட சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டமைக்கான போதியளவான எழுத்து மூல தகவல்கள் பேணிச் செல்லப்படவில்லை.	பிரஜைகள் விஞ்ஞாபனத்திற்கு உரிய மேற்பார்வைகள் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.	சுற்றறிக்கையின் பிரகாரம் பிரஜைகள் மற்றும் சேவை நலனாளிகள் விஞ்ஞாபனம் முறையாகத் தயாரித்தல் மற்றும் மேம்படுத்தல், சேவைகளை நாளது வரையாக்குதல், பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(உ)	2019 மே 31 ஆந் திகதி இலக்கம் 14/2019 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கை	பாதுக்க, ஹோமாகம மற்றும் கடுவல என்ற 03 பிரதேச செயலகங்களில் 921 ஓய்வூதிய கோவைகள் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சுற்றறிக்கையின் பிரகாரம் திருத்தப்படாது இருந்ததுடன் ஏனைய 10 பிரதேச செயலகங்களின் திருத்தப்பட வேண்டி ஓய்வூதியக் கோவைகள் எண்ணிக்கை குறித்துரைத்தவாறு இனங்காணப்பட்டிருக்கவில்லை	திருத்தப்படாத மற்றும் திருத்தப்பட்ட சம்பளங்கள் அதிகரிக்கப்படாத கோவைகள் எந்த அளவு சிறிதளவு காணப்படுகின்றது. எதிர்காலத்தில் இவ்வாறான சந்தர்ப்பங்களின் போது அறிக்கை வைத்துக் கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	சுற்றறிக்கையின் பிரகாரம் ஓய்வூதியக் கோவை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் அவற்றை கால ரீதியில் மேற்கொள்ளாத உத்தியோகத்தர்களுக்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஊ)	2019 மே 30 ஆந் திகதிய இலக்கம் 02/2019 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தி	மரணமடைந்த ஒய்வுதாரரின் தகவல்கள் கால ரீதியில் பெற்று ஓய்வூதியம் பெறுபவர்களின் பெயர் பதிவேட்டை நாளது வரையாக்காமையின் அடிப்படையில் 12 பிரதேச செயலகங்களில் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மரணமடைந்த 485 ஓய்வூதியதாரர்களுக்காக முறையற்ற வகையில் மேலதிகக் கொடுப்பனவுகள் மேற்கொண்டு மேலும் அறவிட வேண்டியதாக ரூபா 46,728,917 காணப்பட்டது.	2015 சனவரி 01 முதல் மாவட்ட பதிவாளர்க்கு மரண அறிக்கை இடுவதற்காக கையடக்கத் தொலைபேசி முறைமை ஒன்று (Mobile App) ஓய்வூதியத் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளதுடன் மேலதிகமாக செலுத்துதப்பட்டவைகளை உரிய தரப்பினரிடம் இருந்து அறவிடப்படுவதுடன் அறவிட முடியாத கொடுப்பனவுகளுக்காக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது.	மரணமடைந்த ஓய்வூதியதார்களின் தகவல்களை கால ரீதியில் நாளது வரையாக்க வேண்டி இருந்ததுடன் மேலதிகமாக செலுத்தப்பட்ட பணத்தை தாமதம் இன்றி அறவிட வேண்டியதுடன் முறையாக பரிசோதனை மேற்கொண்டு மேலதிகமாக செலுத்துவதற்குரிய தொடர்புடைய தரப்பினருக்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.5 வைப்பு மீதிகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்தரைகள்	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டின் இறுதி 08 பொது வைப்புக் கணக்குகளில் ரூபா 929,303,312 மீதி காணப்பட்டதுடன் அதனிடையே 02 பொது வைப்புக் கணக்குகளுக்கு உரியதாக இரண்டு வருடங்களை விஞ்சிய தீர்த்து வைக்கப்படாத கூட்டு மொத்தமான ரூபா 27,954,311 வைப்பு மீதி ஒன்று காணப்பட்டது. மேலும் அந்த மீதியில் ரூபா 16,710,707 கூட்டுத்தொகையான 05 வருடங்களை விஞ்சிய வைப்பாகும். இந்த வைப்புக்களை செலுத்துவதற்கோ அல்லது அரசாங்க வருமானத்தில் செலவு வைப்பதற்கோ முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	உரிய நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு பொறியியலாளர் அறிக்கை மற்றும் பரிந்துரைகளின் பின்னர் நிதிப்பிரமாணம் 571(3) இன் பிரகாரம் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	காலவதியான வைப்பு மீதிகளை விரைவாக தீர்த்து வைப்பதற்கோ அல்லது நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் வருமானத்தை எடுப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்தரைகள்	பரிந்துரைகள்
(அ)	''கிராமிய வீதி அபிவிருத்தி'' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2024 ஆம் ஆண்டிற்குரிய மாவட்ட செயலகம் மற்றும் 07 பிரதேச செயலகங்களில் 2024 செப்தெம்பர் வரையில்	கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்படாத செயல் திட்டங்களுக்கு உரிய நிதியேற்பாடு, போக்குவரத்து,	திட்டமிடப்பட்ட பிரகாரம் மீளாய்வாண்டின் போது உரிய செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க

	உடன்படிக்கை செய்யவோ அல்லது வேலை ஆரம்பிக்கப்படாத 36 கிராமிய வீதி செயற்திட்டங்களுக்காக கொழும்பு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூபா 56,768,678 நிதியேற்பாடு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு மீண்டும் கையளிக்கப்பட்டிருந்தது.	பெருந் தெருக்கள் அமைச்சுக்கு கையளிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் நிதியேற்பாடு கையளிக்கப்பட்டது.	வேண்டி இருந்ததுடன் புதிய நிதியேற்பாட்டை பயன்படுத்துவதற்கு முறையான பிரகாரம் நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	அறிமுகப்படுத்தப்பட்ட மூலதன செலவின நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டிற்கு உரிய 12 பிரதேச செயலகங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாடு ரூபா 349,670,107 இற்கு உரிய 127 செயற்திட்டங்கள் அமுல் படுத்தப்பட்டிருக்கவில்லை.	தேர்தல் நடைபெற்ற காலமாக இருந்தமையால் அரசியலில் எதிர்பார்க்காத நிலைமைக்கு இடையே வழங்குனர்கள் மற்றும் கேள்வி தாரர்களின் பெறுகை நடவடிக்கைகளுக்கு முன்வராமையின் காரணமாக நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.	மேற்படி

4.2 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Outcome) பெற்றுக் கொள்ளப்படாமை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்தரைகள்	பரிந்துரைகள்
(அ)	‘‘சௌபாக்கிய உற்பத்தி கிராமம்’’ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சீதாவாக்க கால்நடை உற்பத்தி கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் 14 அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 1,301,750 பெறுமதியான கால் நடைகள் மற்றும் உபகரணங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும் 07 நலனாளிகளிடமிருந்து 12 ஆடுகள் இருவருக்கு ஏதாவது நோயின் காரணமாக மரணமடைந்து இருந்ததாக அறிவிக்கப்பட்ட போதிலும் எந்த ஒரு கால் நடை மருத்துவ அறிக்கையும் பெற்றுக் கொள்ளப்படாது இருந்ததுடன் 04 நலனாளிகளுக்கு வழங்கப்பட்ட 07 ஆடுகளை இருவர் விற்பனை செய்திருந்த போதிலும் அந்த நலனாளிகளிடம் இருந்து உடன்படிக்கையின் பிரகாரம் உரிய பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	விற்பனை செய்யப்பட்ட 07 ஆடுகள் தொடர்பாக நலனாளிகளிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	செயற்திட்டத்தில் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்ளாமை தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டி இருந்ததுடன் பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	‘‘சௌபாக்கிய உற்பத்தி கிராமம்’’ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் லஹிருகம பிரிவில் சீதாவாக்க சௌபாக்கிய கால் நடைக் கிராம நலனாளிகளுக்கு பயிற்சி மற்றும் விற்பனை மேற்படுத்தல் நிலையம் ஒன்றாக அரைவாசி பூர்த்தி செய்யப்பட்டிருந்த எல்ல கந்த மண்டபம் ரூபா 1,286,159 செலவில் மறுசீரமைக்க	அந்த கட்டிடம் சௌபாக்கிய கால்நடை உற்பத்தி விற்பனைக்காக பயன்படுத்தாத போதும் தற்போது பிரதேசத்தின் தொண்டர் சங்கங்கள் கிராம அபிவிருத்தி சங்கம், மரண உதவி சங்கம் போன்ற சங்கங்களின் கூட்டங்களை	செயற்திட்டத்தை எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்ளாமை தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளை

	வேண்டி இருந்த போதும் சீதாவாக்க சௌபாக்கிய கால்நடைக் கிராம செயற்திட்டம் தோல்வி அடைந்ததன் அடிப்படையில் தற்போது அந்த கட்டிடம் அதனைப் பூர்த்தி செய்யும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை.	நடாத்துதல் மற்றும் அந்த சனசமூக மண்டபத்திற்கு அண்மையில் உள்ள பிரதேச மண்சரிவு ஆபத்துக்க உட்படுகின்ற பிரதேசமாக இருந்தமையால் அவ்வாறான ஆபத்துக்கான சந்தர்ப்பங்களின் பேரில் தற்காலிகமான தங்குமிட நிலையமாகவும் இந்த கட்டிடம் பயன்படுத்தப்படுகின்றது.	மேற்கொண்டு அந்த செயற்திட்டத்தை செயற்படும் நிலைமைக்கு கொண்டு வந்து நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் முறையான பிரகாரம் செயற்திட்டத்தின் மேற்பார்வை மற்றும் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	மொறட்டுவ கடற்தொழில் சார்ந்த சௌபாக்கிய உற்பத்தி கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பெறுமதி ரூபா 2,500,000 ஆன 02 மீன் உலர்த்தும் இயந்திரம் பயன்படுத்தப்படாது இருந்ததுடன் மீன் உலர்த்தும் இயந்திரம் சங்கங்களுக்கு வழங்கும் போது மாதிரி உடன்படிக்கை படிவத்தில் செல்லுபடியான அடங்கியுள்ள முக்கியமான நிபந்தனைகள் மற்றும் தேவையான விடயங்கள் உள்ளடக்கப்படாமல் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. கரையோரம் சார்ந்த பிரதேசத்தில் வாழ்கின்ற மீனவ மக்களின் மீன் விளைச்சலை அதிகரித்துக் கொள்ளல், பிடித்து வரப்படுகின்ற மிகையான மீனின் அளவை தொழில்நுட்ப ரீதியில் பயன்படுத்தி கருவாடு, மாசி தயாரிப்பதற்குத் தேவையான தொழில்நுட்ப பயிற்சி மற்றும் அறிவினை வழங்கும் நோக்கமாக ஆரம்பிக்கப்பட்டிருந்த செயற்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட நலன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பெறப்பட்டிருக்கவில்லை.	உலர்த்தும் 02 இயந்திரங்களுக்கு இடையே ஒரு இயந்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக ஏனைய பிரிவுகளில் இருந்து கோரிக்கை விடுக்கப்பட்டதுடன் அதனை கையளிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. ஏனைய உலர்த்தும் இயந்திரம் பிரிவின் முதலீட்டாளருக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் கையளிக்கப்படுகின்ற உலர்த்தும் இயந்திரங்களுக்காக உரிய சங்கங்கள் சௌபாக்கிய பணிகளின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட மாதிரி உடள்படிக்கைப் பத்திரத்தின் பிரகாரம் உடன்படிக்கை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.	மேற்படி
(ஈ)	மொறட்டுவ கடற்தொழில் சார்ந்த சௌபாக்கிய உற்பத்தி கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் மீன் உலர்த்தும் இயந்திரங்களை ஸ்தாபித்தல் மற்றும் சௌபாக்கிய சங்கங்களின் இருப்பு தொடர்பாக ரூபா 2,926,723 செலவில் மொறட்டுவல்ல மேற்கு பிரிவில் அமைந்துள்ள கைவிடப்பட்டிருந்த	எதிர் காலத்தில் மூன்றாம் தரப்பினரை தொடர்பு படுத்தி உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் மின்சார இணைப்பை பெற்றும் மீன் உலர்த்தும் செயற்பாடுகள் ஆரம்பித்து உற்பத்தி	மேற்படி

சனசமூக மண்டபத்தை மறுசீரமைக்கும் நடவடிக்கைகள் பூரத்தி செய்யப்பட்டு மூன்று வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் இந்த கட்டிடம் உரிய நோக்கங்களுக்காக பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்க வில்லை.	பணிகளுக்கு ஈடுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது கட்டிடம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் பொது நலன் புரி நடவடிக்கைகளுக்கான கூட்டங்களை நடாத்துவதற்கு பயன்படுத்தப்படுகின்றது.

4.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்தரைகள்	பரிந்துரைகள்
(அ)	செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட அந்த அந்த பிரிவுகளின் செயற்பாடுகள் 2024 ஆம் ஆண்டின் போது அடைந்து கொள்ளல் தொடர்பான திட்டம் பிரிவின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட ஒட்டுமொத்த செயல் முன்னேற்றம் மற்றும் 2024 இன் வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் காண்பிக்கப்பட்ட அந்த அந்த பிரிவுகளுக்கு உரிய செயற்பாடுகளை நிறைவேற்றும் செயல் முன்னேற்றத்தை பரீட்சித்த போது 03 பிரிவுகளில் 06 செயற்பாடுகளின் செயல் முன்னேற்றம் ஒன்றுக்கு ஒன்று வேறுபாடான பெறுமதியைக் கொண்டு இருந்தது. வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் 2024 ஆம் ஆண்டில் துரியன் பயிர்களை நடும் ஏக்கர் அளவு தொடர்பாக காண்பிக்கப்பட்ட செயல் முன்னேற்றம் ஒவ்வொரு பகுதியிலும் ஒன்றுக்கு ஒன்று வேறுபாடான பெறுமதியைக் கொண்டு இருந்தது இதன் காரணமாக உள்ளபடியான செயல் முன்னேற்றத்தை இனங்காணுதல் வசதியீனமான பணியாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கப்பட்ட ஏதாவது பிரிவுகளின் இலக்குகளில் அடைந்து கொள்ளும் செயலாற்றல் கணக்காய்விற்கு குறித்துரைத்த ரீதியில் இனங்காண முடியாது இருந்தது.	தாபனப் பிரிவின் 2024 ஆம் ஆண்டின் பொது மக்கள் முறைப்பாடுகளுக்காக வழங்கப்பட்டிருந்த பதிலின் செயல் முன்னேற்றம் 38 ஆக சரியாக சரி செய்தல் வேண்டும். சீதாவாக்க பிரதேச செயலகத்தில் எஸ்வத்த கிராம உத்தியோகத்தர் பிரிவில் 1.75 ஏக்கரில் துரியன் பயிர் செய்கை உடன் ஒட்டுமொத்த செயல் முன்னேற்றம் உள்ளடக்கி துரியன் பயிர்ச் செய்கை பரவலாக்குவதன் கீழ் ஒட்டுமொத்தமாக 9.75 ஏக்கராக குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் விவசாயப் பிரிவின் வெற்றிக்கான குறிகாட்டிகளின் கீழ் பயிர் செய்யப்பட்ட துரியன் 05 ஏக்கராகக் காண்பிக்கப்பட்டமை இலக்காக இருந்ததுடன் அந்த செயல் முன்னேற்றம் 08 ஏக்கராகும்.	சமர்ப்பிக்கப்படுகின்ற சகல அறிக்கைகளிலும் அந்த அந்த பிரிவுகளின் உரிய செயற்பாடுகளை நிறைவேற்றும் செயல் முன்னேற்றத்தை சரியாக காண்பிக்க வேண்டி இருந்ததுடன் சரியான தகவல்களின் அடிப்படையில் அறிக்கை தயாரிக்கப்பட்டமையை உறுதிப்படுத்தும் வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படல் வேண்டும்.

4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

(அ) அரைவாசி பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்தரைகள்	பரிந்துரைகள்
(i)	மஹரகம், கடுவெல, கோட்டை, சீதாவாக்க மற்றும் ஹோமாகம என்ற அதிகாரப் பிரதேசத்தில் அரைவாசி பூர்த்தி செய்யப்பட்ட 19 கட்டிடங்கள் காணப்பட்டதுடன் 16 கட்டிடங்களுக்காக அந்த பிரதேச செயலகத்தினால் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டு அண்ணளவாக கிரயம் மொத்தமாக ரூபா 25,933,502 செலவிடப்பட்டிருந்தது. இந்த கட்டிடத்தில் இருந்து அநேகமான நிதியேற்பாட்டின் அளவு போதியளவில் இல்லாமையின் காரணமாக பயன்படுத்துவதற்கு கூடிய மட்டத்தில் காண்பித்து பூர்த்தி செய்வதற்கு முடியாது இருந்ததன் அடிப்படையில் அரைவாசி பூர்த்தி நிலையில் காணப்பட்டதுடன் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.	இவ்வாறான செயற்திட்டங்களில் இருந்து இனங்காணப்பட்ட கிராம அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இந்த முன்மொழிவு உள்ளடக்கப்பட்டு எதிர்காலத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு குறிப்பிடுகின்றோம்.	அரைவாசி பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடத்தை பயன்படுத்தக் கூடிய நிலைக்கு கொண்டு வந்து பூர்த்தி செய்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ) குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்தரைகள்	பரிந்துரைகள்
(i)	சனாதிபதி செயலக செலவினத் தலைப்பின் கீழ் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டு 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் அமுல்படுத்தப்பட்டிருந்த வறுமை ஒழித்தல் நோக்கு அடைந்து கொள்ளல் ''கிராம சக்தி மக்கள் நிகழ்ச்சித் திட்டம்'' இன் கீழ் 124 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதில் 90 சங்கங்கள் செயல் இழந்து காணப்பட்டது. அத்திகதியில் செயல் இழந்த சங்கங்களுக்கு உரிய கிராம சக்தி தாய் சங்கக் கணக்கில் ரூபா 31,882,213 தொகையும், நுண் நிதி கணக்கில் ரூபா 277,921 தொகையும் ஆக வங்கிக் கணக்கு மீதிகளில் காணப்பட்ட மீதி ரூபா 32,160,134 பணம் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது.	கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கின்றோம்.	சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்த வேண்டி இருந்ததுடன் முறையான பிரகாரம் நடவடிக்கை எடுத்து குறைவாக பயன்படுத்தப்பட்ட பணத்தை வருமானத்திற்கு எடுத்தல் வேண்டும்.

(இ) வாகன பயன்பாடு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்தரைகள்	பரிந்துரைகள்
(i)	மாவட்ட செயலகத்தால் பயன்படுத்தப்படுகின்ற 51 வாகனங்களுக்கு இடையே 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பழுது பார்ப்பதற்காக அனுப்பப்பட்டுள்ள ஓட்ட நிலைமையில் காணப்படாத 08 வாகனங்கள் காணப்பட்டதுடன் அந்த வாகனங்கள் 03 மாதங்கள் முதல் 45 மாதங்கள் வரையான காலம் முதல் ஓட்ட நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படுத்தப்பட்டிருக்க வில்லை. மேலும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 வாகனங்களின் உரித்து மாவட்ட செயலகத்தின் பெயரில் கையேற்கப்படாது இருந்ததுடன் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் இருந்து கணக்காய்விற்குக் கிடைத்த தகவல்களின் பிரகாரம் கொழும்பு மாவட்ட செயலாளரின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த 13 வாகனங்கள் தற்போது மாவட்ட செயலகத்தில் காணப்படாது இருந்ததுடன் அந்த வாகனங்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை.	மாவட்ட செயலகத்திற்கு கையேற்கப்படாத வாகனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	வாகனங்களின் உரித்தை உரிய பிரகாரம் கையளிப்பதற்கோ அல்லது கையேற்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் மற்றும் பழுது பார்த்தலை முறையான பிரகாரம் விரைவாக மேற்கொண்டு வாகனங்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் மாவட்ட செயலகத்தில் காணப்படாத 13 வாகனங்கள் தொடர்பாக முறையான விசாரணை பரிசோதனை நடாத்துதல் வேண்டும்.
(ii)	மாவட்ட செயலகத்தால் பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்று 2021 ஆகஸ்ட் 24 ஆந் திகதி ஏற்பட்ட தொழில் நுட்பக் கோளாறின் அடிப்படையில் பழுது பார்ப்பதற்காக கூறுவிலைகள் கோரி ரூபா 497,075 தொகையில் பழுது பார்த்தல் பொருளாதார ரீதியில் ஆக்க பூர்வமானதாக இருந்ததாக இயந்திரப் பொறியியலாளரால் 2021 செப்தெம்பர் 21 ஆந் திகதி பரிந்துரை செய்யப்பட்டிருக்கும் போது அந்த பரிந்துரை அமுல்படுத்தாமல் மீளாய்வாண்டின் இறுதி வரையில் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் ஆக பாதுகாப்பு இன்றி, வெயில் மழைகளுக்கு உட்பட்டு திறந்த வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.	இந்த மோட்டார் வாகனம் மற்றும் ஓட்ட நிலையில் காணப்படாத ஏனைய வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்காக மழையில் இருந்து மேவுகை செய்யும் நிலையம் ஒன்றை தயாரித்து அந்த வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.	வாகனங்கள் பழுது பார்த்தலை முறையான பிரகாரம் விரைவாக மேற்கொண்டு வாகனங்களை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் அவ்வாறு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(iii)	பழுது பார்ப்பதற்காக மாவட்ட செயலகத்திற்கு கையளிக்கப் பட்டிருந்த கொலன்னாவ பிரதேச செயலகத்தின் டபிள் கப் வண்டி மாவட்ட பெறுகைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ரூபா 905,480 செலவில் பிரதான செயற்பாட்டு அலகான எஞ்சின் மற்றும் கியர் முறைமையில் செயற்படு நிலை, இருப்பு மற்றும் காணப்படுகின்ற குறைபாடுகள் தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் மோட்டார் வாகனத்தின் குளிரூட்டி மற்றும் வளிப்பதனாக்கி, கியர் முறைமைகளில் மற்றும் மோட்டார் வாகனத்தின் சட்டகத்தில் நிறப்பூச்சுக்கள் போன்ற பழுது பார்த்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த பழுது பார்த்தல் மேற்கொண்டு ஒரு வருட காலம் கடப்பதற்கு முன் அந்த மோட்டார் வாகனத்தின் எஞ்சின் மற்றும் கியர் முறைமையில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாக விற்றுத் தீர்ப்பதற்காக பரிந்துரை செய்யப்பட்டமையால் இந்த வாகனம் பழுது பார்ப்பதற்காக செலவிடப்பட்ட தொகை விளைவற்ற செலவினத்திற்கு உட்பட்டு இருந்தது.	கணக்காய்வு அவதானிப்புக்களைக் கவனம் செலுத்தி இயந்திரப் பொறியியலாளரின் பரிந்துரையைப் பெற்றுக் கொள்வதற்கும் மோட்டார் வாகனத்தின் பழுது பார்த்தல் மேற்கொள்வதற்காக எவ்வளவு தொகை செலவாகியது என்பது தொடர்பாகவும் மீண்டும் அறிக்கை ஒன்றைப் பெறுவதற்கும் அந்த அறிக்கை விற்றுத் தீர்க்கும் குழுவிற்கு அனுப்பப்பட்டு மீண்டும் குழுவின் பரிந்துரையைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் அந்தக் குழுவின் அறிக்கையின் பிரகாரம் எதிர்காலத்தில் மிகுதி நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படும்.	பிரதான இயந்திர குறைபாடுகள் இனங்காணாமல் ஏனைய பழுது பார்த்தல்களை மேற்கொள்வதற்கு தீர்மானம் எடுத்தல் தொடர்பாக முறையான பரிசோதனை மேற்கொண்டு மிகுதி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(iv)	திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தில் எரிபொருள் இயலளவு லீற்றர் 55 ஆன மோட்டார் வாகனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட வாகன ஓட்டக் குறிப்புக்களில் 789 இற்கும் 846 லீற்றர் இற்கும் அசாதாரண எரிபொருள் அளவு எரிபொருள் தாங்கியில் எஞ்சி இருந்ததாக காண்பிக்கப்பட்ட போதிலும் அதற்கான காரணங்கள் வெளிப்படுத்தாமல் 10 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் தொடர்ச்சியாக எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது. மேலும் அதிக ரீதியில் வெள்ளைப் புகை வெளியிட்டதன் காரணமாக பழுது பார்த்தல் மேற்கொண்டு அதன் பழுது பார்த்தல் மேற்கொள்ளப்பட்டதாக தொழில் நுட்ப உத்தியோகத்தரின் பரிந்துரை 2023 திசெம்பர் 27 ஆந் திகதி சமர்ப்பித்து அதற்காக 2023 திசெம்பர் 28 ஆந் திகதி ரூபா 1,249,250 செலுத்தப்பட்டிருந்த போதும் அந்த மோட்டார் வாகனத்தின் ஓட்டக் குறிப்பின் பிரகாரம் 2023 திசெம்பர் 09 ஆந் திகதி மோட்டார் வாகனம் பழுது பார்ப்பதற்காக அனுப்பப்பட்டிருந்ததுடன் பழுது பார்த்தல் பூர்த்தி செய்யப்பட்டு மீண்டும் மோட்டார் வாகனம் ஓட்டத்திற்காக 2024 மார்ச் 12 ஆந்	இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுப்பதற்கும் மாகாணங்களைப் பழுது பார்க்கும் போது இயலுமான வரை வாகனம் முகவர் நிறுவனத்திற்கு அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	மோட்டார் வாகனத்தின் எரிபொருள் இயலளவை விஞ்சி ஓட்டக் குறிப்புக்களில் எஞ்சியிருந்த எரிபொருள் காண்பிக்கும் போது எரிபொருள் விநியோகத்தல் மற்றும் பழுது பார்ப்பதற்கு முன் கொடுப்பனவுகள் மேற்கொண்டமை தொடர்பாக உரிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	திகதியே ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த பழுது பார்த்தல் முடிவடைவதற்கு முன் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.		
(v)	மாவட்ட செயலகத்தால் பயன் படுத்தப்பட்ட மோட்டார் வாகனத்திற்காக ரூபா 1,158,950 செலவில் ஒரு வருட கால உத்தரவாதத்தின் கீழ் 2022 திசெம்பர் 20 ஆந் திகதி பழுது பார்த்தல் மேற்கொண்டு 2023 யூலை 28 ஆந் திகதி வரை 3,435 கிலோ மீற்றர் மாத்திரம் ஓடப்பட்டிருந்ததுடன் அத் திகதியின் பின்னர் ஓட முடியாமைக்கான காரணம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மேற்கூறப்பட்ட பழுது பார்த்தலுக்கு உரிய உத்தரவாதக் காலம் முடிவடைந்த பின்னர் அதாவது 2024 மார்ச் 03 ஆந் திகதி தொழில் நுட்பக் கோளாறு தொடர்பாக அறிக்கையிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உத்திரவாதக் காலத்தில் உரிய பிரகாரம் ஓடாமையின் அடிப்படையில் உத்தரவாதக் காலத்தின் போது பெறக் கூடியதாக இருந்த நலன்கள் இழக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் 2025 ஏப்ரல் வரையிலும் அதாவது 20 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் இந்த வாகனம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாமல் பழுது பார்ப்பதற்காக அனுப்பப்பட்டிருந்தது.	இந்த வாகனம் பொது 268 படிவத்தில் உரிய பிரகாரம் ஓட்டக்குறிப்புக்கள் எழுதப்படாது இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதனால் இந்த வாகனம் 20 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் ஓடப்படாது இருந்த வாகனமாகக் கருதி பழுது பார்த்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறான நிலைமை ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுப்பதற்கும், ஓட்டக் குறிப்பு பதிவுகள், சம்பவத் திரட்டுப் புத்தகம் போன்றவற்றை சரியாக பேணிச் செல்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்படும்.	வாகனங்களை உச்ச அளவில் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்துவதற்கும் மற்றும் ஓட்ட குறிப்புக்களை உரிய பிரகாரம் பூர்த்தி செய்து கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பதற்கும், வாகனத்தை முறையான பிரகாரம் ஓட்ட முறையாக ஓடி உத்தரவாதக் காலத்தில் பழுது பார்த்து அனுப்பாமை தொடர்பாக பரிசோதனை ஒன்றை நடாத்தி உரிய தரப்பினருக்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.5 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்தரைகள்	பரிந்துரைகள்
(அ)	2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கொழும்பு மாவட்ட செயலகத்தில் தீப்பிடித்ததால் ஏற்பட்ட இழப்பிற்கு 12 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அது தொடர்பாக விசாரணைகள் பூர்த்தி செய்யப்படாமையால் இந்த இழப்பை அறவிடுவதற்கோ அல்லது பதிவளிப்பதற்கோ முடியாது இருந்ததுடன் நட்டத்தின் பெறுமதி ரூபா 92,606,688 ஆகும்.	பொலிஸ் பரிசோதனை மற்றும் அரசாங்கத்தின் இரசாயணப் பகுப்பாய்வின் அடிப்படையின் பிரகாரம் மேலும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றமையால் பரிசோதனை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் திறைசேரியில் இருந்து ஆலோசனைகளைப் பெற்று மிகுதி நடவடிக்கைகள் மேற்கொண்டு கணக்காய்விற்கு அறிக்கையிடப்படும்.	தீ ஏற்பட்டமை தொடர்பாக விசாரணை நடவடிக்கைகளை விரைவாக பூரத்தி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	ஓய்வூதியம் செலுத்தும் போது ஆரம்ப சம்பளம் மேலதிகமாக செலுத்தியமை, பணிக் கொடைப் பணம் மேலதிகமாக செலுத்தியமை, வாழ்க்கைச் செலவுப் படி, இடைக்காலப் படி, தங்கியிருந்தல் படி போன்ற படிகள் மேலதிகமாக செலுத்தியமை, ஓய்வூதிய சுற்றறிக்கைகளுக்கு இணங்காத வகையில் மேலதிகமாக கொடுப்பனவு செய்தல் போன்ற பல்வேறு காரணங்களின் அடிப்படையில் கொழும்பு மாவட்டத்தின் 13 பிரதேச செயலகங்களுக்கு உரிய அதிகாரப் பிரதேசத்தில் 181 ஓய்வூதியதார்களுக்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட, 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் மேலும் அறவிட வேண்டிய ரூபா 29,752,987 தொகை காணப்பட்டதுடன் அதனிடையே 06 பிரதேச செயலகங்களில் 12 ஓய்வூதியதாரர்களின் மரணமடைந்தமை அல்லது ஏனைய காரணங்களின் அடிப்படையில் அறவிடப்படாததாக இனங்காணப்பட்ட தொகை ரூபா 2,458,613 ஆகும்.	ஏற்பட்டவைகளின் அநேகமாக மேலதிகக் கொடுப்பனவுகள் சில காலத்தில் விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் பின்னர் வெளிப்படுத்தப்பட்ட மேலதிக கொடுப்பனவுகளாக இருந்ததுடன் அவற்றில் அநேகமானவை பிரதேச செயலகங்களின் நிர்வாகத்திற்கு அப்பாற்பட்ட காரணங்களால் ஏற்பட்டு இருந்ததுடன் ஏனைய மேலதிக கொடுப்பனவுகள் பிரதேச செயலகத்தின் மூலம் ஏற்பட்ட பிழையான கணிப்பீட்டின் அடிப்படையில் ஏற்பட்ட மேலதிகக் கொடுப்பனவாகும்.	மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள ஓய்வூதிய பணத்தை தாமதம் இன்றி அறவிட வேண்டி இருந்ததுடன் மேலதிக செலுத்துதலுக்காக பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	சீதாவாக்க பிரதேச செயலக அதிகாரப் பிரசேதத்தில் 2016 யூன் 05 ஆம் திகதி ''சாலாவ'' இராணுவ முகாமில் அவசர வெடிப்பின் காரணமாக இழப்பு ஏற்பட்ட 427 அந்த மண்டபம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் நபர் ஒருவரின் வீட்டிற்காக ரூபா 3,635,000 ஆன முதலாவது மதிப்பீடு, 2016 செப்தெம்பர் 23 ஆந் திகதிய மதிப்பீட்டின் மூலம் ரூபா 1,500,000 ஆக திருத்தப்பட்டிருந்தது. அந்த திருத்தப்பட்ட மதிப்பீடு 2016 செப்தெம்பர் 26 ஆந் திகதி சீதாவாக்க பிரதேச செயலகத்திற்கு கிடைக்கப் பெற்றிருந்த போதும் முன்னைய மதிப்பீட்டின் அடிப்படையில் முன்னர் சேவையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தரால் ரூபா 3,635,000 செலுத்தியதன் காரணமாக மேற்குறிப்பிடப் பட்ட நபருக்கு ரூபா 2,006,872 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. 2025 பெப்ரவரி வரையிலும் மேற்கூறப்பட்ட சம்பவங்கள் ஏற்பட்டு 08 வருடங்களுக்கு மேற்பட்ட காலம்	இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட திணைக்களப் பரிசோதனை அறிக்கை 2025 ஏப்ரல் 29 ஆந் திகதி மாவட்ட செயலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக சட்டமாதிபர் திணைக்களம் ஊடாக அவிசாவளை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டதுடன் அந்த வழக்கின் மிகுதி நடவடிக்கைகள் தற்போது வரையிலும் மேற்கொள்ளப்படுகின்றது.	மேலதிக செலுத்தப் பட்டுள்ள பணத்தை தாமதாக அறவிட வேண்டி இருந்ததுடன் மேலதிக செலுத்துதலுக்காக பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	கடந்திருந்த போதிலும் அந்த மேலதிக செலுத்துதல்களை உரிய நபர்களிடம் இருந்து அறவிடுதற்கு தவறியிருந்தது.		
(ஈ)	மாவட்ட செயலகத்திற்கு உரிய மோட்டார் வாகனம் ஒன்று 2024 செப்தெம்பர் மாதம் 20 ஆந் திகதி விபத்துக்கு உட்பட்டு இருந்ததுடன் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த இழப்பின் மதிப்பீட்டுப் பெறுமதி இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் தொடர்ந்தும் அறவிட வேண்டுவதற்கோ அல்லது பதிவளிப்பதற்கோ அல்லது கைவிடுவதற்கோ உள்ள நட்டத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வு அவதானிப்புக்களில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பிரகாரம் ஆரம்ப பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளலில் தாமதம் ஏற்பட்டிருந்ததை ஏற்றுக் கொள்கின்றோம். தற்போது விபத்து தொடர்பாக ஆரம்ப விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு முடிவடைந்துள்ளதுடன் பழுது பார்த்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உரிய மதிப்பீடு காப்புறுதிக் கம்பனிக்கு அனுப்பப்பட்டுள்ளது.	வாகன விபத்து தொடர்பாக நிதிப்பிரமானத்தின் பிரகாரம் பரிசோதனைகளை விரைவாக நடாத்தி மதிப்பீடு செய்த இழப்பு மற்றும் நட்டம் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.6 முகாமைத்துவ நலிவுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்தரைகள்	பரிந்துரைகள்
(அ)	கொழும்பு, தெஹிவளை, கொலன்னாவ, இரத்மலானை, சீதாவாக்க, மொறட்டுவ மற்றும் கெஸ்பாவ போன்ற பிரதேச செயலகங்கள் நடாத்திச் செல்லப்படுகின்ற காணிகளின் உரித்து அந்த பிரதேச செயலகத்திற்கு சொந்தமில்லாது இருந்ததுடன் அவற்றின் உரித்தைக் கையேற்பதற்கு மீளாய்வாண்டிள் இறுதி வரையிலும் முடியாது இருந்தது.	காணிகளின் உரித்து பிரதேச செயலகத்தில் கையேற்பதற்கு உரிய மிகுதி நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுவதுடன் கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு கவனம் செலுத்தி உரித்தைக் கையேற்காத பிரதேச செயலகங்கள் தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	காணிகளின் உரித்து உரிய பிரதேச செயலகங்களுக்கு கையேற்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	சீதாவாக்க பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் கொட்டபொடவத்தேயில் அமைந்துள்ள அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு உரிய வாடகை வருமானம் நீண்ட காலம் முதல் அறவிடப்படாது இருந்ததுடன் நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முடியாது இருந்தது.	ஒட்டுமொத்த நிபந்தனைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பிரச்சனைகளை தீர்த்துக் கொள்வதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்குமாறு சட்டமாதிபரால் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் உரிய தரப்பினருடன் கலந்துரையாடப்பட்ட போதும் குடியிருப்பாளர்களால் ஏனைய மாற்று காணிகள் அல்லது வீடுகள் தமக்கு தேவையில்லாது இருந்ததாகவும் கூறியதன் காரணமாக இணக்கப்பாட்டிற்கு வர முடியாது இருந்தது. அது தொடர்பாக சட்டமாதிபர்	நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் மீண்டும் கவனத்தில் கொள்ளுமாறும் மீண்டும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	
(இ)	05 பிரதேச செயலகங்களில் 125 ஓய்வூதியதாரர்களுக்காக நிரந்தர அல்லது தற்காலிக ஓய்வூதிய கோவை காணப்படாது இருந்த ஓய்வூதியம் காணப்படாமல் ஓய்வூதியம் செலுத்தப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது மாத்திரம் கூட்டுமொத்தமாக ரூபா 16,236,922 தொகை அவ்வாறு செலுத்தப்பட்டிருந்தது. மேலும் 10 பிரதேச செயலகங்களில் 202 ஓய்வூதியதரர்களுக்காக தற்காலிக ஓய்வூதியக் கோவை மூலம் மீளாய்வாண்டில் மாத்திரம் கூட்டுமொத்தமாக ரூபா 58,974,495 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்த தற்காலிக ஓய்வூதியக் கோவைகளுக்கு இடையே 04 பிரதேச செயலகங்களில் 64 கோவைகளுக்காக அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை.	242 கோவைகளுக்காக தற்காலிக கோவை தயாரிக்கப்பட்டு ஓய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் மிகுதி கோவைகள் தொடர்பாகவும் எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறே ஏனைய இந்த கோவைகள் மோசடி உடன் இல்லாத வகையில் உறுதிப்படுத்துவதற்காக ஓய்வூதியம் செலுத்தக்கூடிய ஆவணம் ஒன்றாக பெற்றுக் கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	ஓய்வூதியக் கோவை இன்றி ஓய்வூதியம் செலுத்துகின்ற ஓய்வூதியதாரர்களின் நிரந்தர கோவையை கண்டறிவதற்கு நடவடிக்கை எடுத்தல் அல்லது முறையான அங்கீகாரத்தின் கீழ் தற்காலிக கோவையின் அடிப்படையில் செலுத்த வேண்டி இருந்ததுடன் இது தொடர்பாக உரிய பிரகாரம் நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்களுக்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	2024 ஆம் ஆண்டிற்காக 2024 யூன் 30 இல் உள்ளவாறு உயிர் வாழ்வு சான்றுதழ் நாளது வரையாக்கப்படாத 09 பிரதேச செயலகங்களில் 122 ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதிம் செலுத்துதல் 2024 யூலை மாதம் முதல் கைவிடப்பட்டிருந்த போதிலும் இந்த ஓய்வூதியதாரர்கள் மரணமடைந்திருந்தமை, குடியிருப்பில் இருந்து விலகிச் சென்றிருந்தமை, வெளிநாடு சென்றிருந்தமை போன்ற விடயங்கள் தொடர்பான தகவல்கள் 2025 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறும் கண்டறிவதற்கு முடியாது இருந்தது.	2024 ஆம் ஆண்டிற்கு உரிய உயிர் வாழ்வுச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளாமையின் அடிப்படையில் ஓய்வூதியம் நிறுத்தப்பட்டிருந்த 122 ஓய்வூதியதாரர்களின் தகவல்களை 2025.03.31 ஆந் திகதி வரையிலும் தகவல்களை கண்டறிய முடியாது உள்ளது.	உயிர் வாழ்வுச் சான்றிதழ் வழங்காத ஓய்வூதியதாரர்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் தாமதம் இன்றி மேற்கொண்டு ஓய்வூதியம் மேலதிகமாக செலுத்தும் சந்தர்ப்பங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(உ)	கொழும்பு மாவட்டத்தின் 13 பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அனுமதியற்ற பிடித்து வைக்கப்பட்டிருந்த 973 காணிக் கூறுகளாக இருந்த போதும் மீளாய்வாண்டில் 03 பிரதேச செயலகங்களினால் 06 காணி கச்சேரிகள் நடாத்தி 02 பிரதேச செயலகங்களுக்கு மாத்திரம் 12 அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தது. ஏனைய 10 பிரதேச செயலகங்களிலும் 2024 சனவரி 01 இல் உள்ளவாறு அனுமதியற்ற பிடித்து வைக்கப்பட்ட 594 காணிக் கூறுகள் காணப்பட்ட போதும் மீளாய்வாண்டின் போது காணிக் கூறுகள் எதுவும் ஒழுங்கு முறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை.	13 பிரதேச செயலகங்களில் அனுமதியற்ற காணி கூறுகள் 973 தொடர்பாக தற்போது பிரதேச செயலக மட்டத்தில் ஒழுங்கு முறைப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றது.	அனுமதியற்று பிடித்து வைக்கப்பட்ட காணிகளை முறையான பிரகாரம் ஒழுங்கு முறைப்படுத்துவதற்கோ அல்லது மீண்டும் பெற்றுக் கொள்வதற்கோ விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.7 நிலைபேறா அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்தரைகள்	பரிந்துரைகள்
(அ)	நிலைபேற்ன அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல் தொடர்பாக 2024 இன் வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளும் செயலாற்றலின் கீழ் 32 பிரிவுகளுக்கு உரிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் 12 இன் கீழ் 203 குறிகாட்டிகளின் செயல் முன்னேற்றம் காண்பிக்கப்பட்டதுடன் அதில் 11 குறிகாட்டிகளின் செயல் முன்னேற்றம் 50 சதவீதத்திற்கு குறைவான பெறுமதியும் 47 குறிகாட்டிகளின் செயல் முன்னேற்றம் 50-74 சதவீதத்திற்கு இடையிலான பெறுமதியிலும் காணப்பட்டதுடன் 02 குறிகாட்டிகளின் இலக்குக்கு உரியதாக அடைந்து கொள்ளப்பட்ட செயல் முன்னேற்றம் காண்பிக்கப்பட வில்லை.	மின்சாரம் முறைமை பழுது பார்த்தல் 03 பிரதேச செயலகங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. சீதாவாக்க பிரதேச செயலகத்தில் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சியுள்ள 02 அலுவலகங்கள் எதிர்வரும் ஆண்டில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். சமுர்த்தி பிரிவு – சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் நிதியேற்பாடு இல்லாமை சிறிய வியாபார சிறி தொழில் முயற்சிப் பிரிவு – வங்கி வட்டி விகிதம் உயர்வடைந்து சென்றமையால் தொழில் முயற்சியாளர்கள் முதலீட்டு முன்வரவில்லை.	நிலைபேறான அபிவிருத்தி நோக்காகக் கொண்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக வெற்றிகரமான குறிகாட்டிகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2024 ஆம் ஆண்டின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருந்த 09 நிலைபேறான அபிவிருத்தி	கண்க்காய்வு அவதானிப்புகளைக் கவனம் செலுத்தி செயலாற்றல் குறிகாட்டிகளை அளவிடுவதற்கு முடியுமான வகையில் உள்ளக	நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்கு உரிய செயலாற்றல்

	இலக்குகள் / குறிகாட்டிகள் 2024 இன் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்காமையின் காரணமாக அவற்றுக்கு உரிய 2024 ஆம் ஆண்டின் இலக்கு எத்தகையது என உறுதிப் படுத்தப்படாமையினால் அந்த குறிகாட்டிகைள அடைந்து கொள்ளும் செயலாற்றலை கணக்காய்வில் அளவிட முடியாது இருந்தது.	இலக்கை காண்பிப்பதற்கும் அந்த குறிகாட்டிகளை அடைந்து கொள்வதற்கும் செயல் முன்னேற்றத்தை அடைந்து இலக்கினை அடைந்து கொள்ளும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்படும்.	குறிகாட்டிகளை அளவிடுவதற்கு முடியுமான வகையில் உரிய இலக்குகள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2024 இன் வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் காண்பிக்கப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களின் 02 இலக்குகளின் செயல் முன்னேற்றம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதும் ஏனைய அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட செயல் முன்னேற்றம் ஒன்றுக்கு ஒன்று வேறுபாடாக இருந்ததுடன் 2024 இன் வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் காண்பிக்கப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளும் செயல் முன்னேற்றம் தொடர்பாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி சரியாக உறுதிப்படுத்தலைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாது இருந்தது.	கணக்காய்வு அவதானிப்புக்களில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பிரகாரம் இவ்வாறான பிழைகளை எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சகல அறிக்கைகளிலும் நிலைபேறான நோக்கங்களை அடைந்து கொள்ளும் செயல் முன்னேற்றம் சரியாகவும், ஒரே தன்மையிலும் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் சரியான தரவுகள் மற்றும் தகவல்கள் அறிக்கைகள் உள்ளடக்கப்பட்டு இருந்ததை உறுதிப்படுத்துகின்ற வேலைத் திட்டம் ஒன்றை தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

5. நல்லாளுகை

5.1 பொதுமக்களுக்கு சேவையினை நிறைவேற்றுதல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	பொது மக்களுக்கு நாளாந்தம் தொடர்ச்சியாக நிறைவேற்றும் எதிர்பார்ப்பில் வருகை தருகின்ற நிறுவனங்களின் அதிக கேள்வி ஏற்பட்டுள்ள சேவைகளுக்காக செயலாற்றல் குறிகாட்டிளை இனங்காணம் மற்றும் அவற்றை நிறைவேற்றும் அளவினை அளவிடுதந்கா அரச நிர்வாக உள்நாட்டு அலுவலகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயலாளரின் 2020 சனவரி 24 ஆந் திகதிய உள்நாட்டலுவல்கள் கணக்கு சுற்றறிக்கை இலக்கம் 02/2018(II) இன் மூலம் சகல மாவட்ட செயலாளருக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் 2024	கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றோம்.	சுற்றறிக்யையின் பிரகாரம் அதிகமாகக் கோரப்பட்டுள்ள சேவைகளுக்காக செயலாற்றல் குறிகாட்டிகளை இனங்காணல், இலக்குகளை ஸ்தாபித்தல் மற்றும் அளவிடல் மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் அவ்வாறு மேற்கொள்ளாமைக்கு உரிய தரப்பினருக்கு முறையான நடவடிக்கை

ஆம் ஆண்டின் போதும் ஒவ்வொரு பிரதேச செயலகங்கினாலும் அதிகமாக கோரப்பட்டுள்ள சேவைகளுக்காக செயலாற்றல் குறிகாட்டிளை இனங்காணல், உரிய இலக்குகளை வழங்குதல் மற்றும் செயல் முன்னேற்றம் என்பன அளவிடப்பட்டடிருக்கவில்லை.		எடுத்தல் வேண்டும்.

6. மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்தரைகள்	பரிந்துரைகள்
(அ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடமை நடவடிக்கைகளுக்காக தொடர்ச்சியான பங்களிப்பு இன்றி 04 பிரதேச செயலகங்களில் கட்டாய விடுமுறை பெற்ற 07 உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் வேலை நீக்கம் செய்யப்பட்ட ஒரு ஊழியருக்கும் 2017 – 2024 வருட காலப் பகுதியில் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 8,880,468 தொகையும், 03 பிரதேச செயலகங்களில் இலஞ்ச ஊழல் தொடர்பாக கட்டாய விடுமுறையின் அடிப்படையில் இருந்த ஓய்வூதிய பிரமாணக் கோவையின் 2.12 ஆம் பிரிவின் கீழ் ஓய்வு பெற்றுச் சென்ற மூன்று கிராம சேவை உத்தியோகத்தர்களுக்காக சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,615,529 செலுத்தப்பட்டதுடன் அதனிடையே மூன்று நபர்களிடம் இருந்து அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய ரூபா 261,970 தொகையும் காணப்பட்டதுடன் அந்த பணத்தையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கட்டாய விடுமுறை பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய மொத்த தொகையும் ஓய்வூதியம் செலுத்தும் போது முழுமையாக அறவிடுமாறு உத்தியோக்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்படும்.	அரசாங்கத்திடம் அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கும் , தாபன விதிக் கோவையில் காணப்படுகின்ற சட்ட விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	சீதாவாக்க பிரதேச செயலகத்தில் சேவையாற்றிய உத்தியோகத்தர் ஒருவர் இலஞ்ச ஊழல் குற்றத்தின் அடிப்படையில் வேலை நீக்கம் செய்யப்பட்டு இலஞ்ச ஊழல் சட்டத்தின் 19(ஆ) மற்றும் திருத்தப்பட்ட சட்டத்தின் 19(இ) இன் பிரகாரம் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தின் வழக்கு தீர்ப்பின் பிரகாரம் 2019 சனவரி 15 ஆந் திகதி பிரதிவாதி தவறு இழைத்து இருந்தார். அதன் பின்னர் உத்தியோகத்தரால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதில் வர் குற்றவாளியாக தீர்ப்பு	கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றோம்.	தாபன விதிக் கோவை மற்றும் காணப்படுகின்ற சட்டங்கள் விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் தீர்மானம் எடுக்கும் போது உத்தியோகத்தர்களுக்கு பிழையான வழிகாட்டல் வழங்காத வகையில் தீர்மானம் எடுத்தல் வேண்டும்.

	வழங்கப்பட்டிருந்தது. இந்த உத்தியோகத்தர் தொடர்பாக நடாத்தப்பட்ட வழக்கு விசாரணைகள் கௌரவ நீதவான் நீதிமன்றத்தின் தீர்மானம், மேல் நீதிமன்றத்தின் தீர்மானம் மற்றும் தாபன விதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 22 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை கவனத்தில் கொண்டு உத்தியோகத்தருக்கு எதிராக நடாத்தப்பட்ட முறையான ஒழுக்காற்று பரிசோதனையும் அவருக்கு எதிராக எழுந்திருந்த குற்றங்களுக்காக குற்றவாளியாக தீர்மானிக்கப்பட்ட போது அவர் அவர் குற்றத்தின் தன்மை, அவருக்கு எதிராக முன்னை தவறுகள், குற்றங்கள் காணப்படாது இருந்தமை 12 வருட காலத்திற்கு மேற்பட்ட காலம் வேலை நீக்கத்திற்கு உட்பட்டமை என்ற விடயங்களைக் கவனத்தில் கொண்டு அவர் 2024 மே 15 ஆம் திகதி வேலை நீக்கத்திற்கு உற்பட்ட காலத்திற்கு சம்பளம் செலுத்தாமல் மாவட்ட சேவைகள் திணைக்களத்தால் மீண்டும் ஒரு தடைவ சேவையில் அமர்த்தப்பட்டிருந்தார்.		
(இ)	05 வருடங்கள் ஒரே சேவை நிலையத்தில் சேவையாற்றிய சகல உத்தியோகத்தர்களும் வேறொரு பதவியில் அல்லது சேவை நிலையங்களில் சேவையாற்றுவதற்கு சந்தர்ப்பம் அளிப்பதற்காக உடனடியாக இடமாற்றம் வழங்க வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக மாவட்ட செயலகம் மற்றும் 02 பிரதேச செயலகங்களில் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேவைக்காலம் 05 வருடங்களை விஞ்சிய 55 உத்தியோகத்தர்கள் சேவையாற்றுகின்றனர்.	கணக்காய்வு அவதானிப்புக்களை கவனம் செலுத்தி நடவடிக்கை எடுப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்படும்.	வருடாந்த இடமாற்றம் கீழ் வருகின்ற உத்தியோகத்தர்கள் தொடர்பாக தகவல்களை முறையான பிரகாரம் பெற்று உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்குதல் வேண்டும்.
(ஈ)	2024 ஆம் ஆண்டிற்காக மனித வள அபிவிருத்தித் திட்டத்தின் 07 உத்தியோகத்தர்களுக்கு உரிய உத்தியோகத்தர்கள் காணப்பட வேண்டிய தொழில்நுட்ப திறன் இனங்காணப்படாது இருந்ததுடன் 07 நிறைவேற்று தர உத்தியோகத்தர்களுக்கான பணிகளை நிறைவேற்றுவதற்காக அத்தியாவசியமாகக் காணப்பட வேண்டிய தொழில் நுட்ப திறன் ஆக மென்பொருள் தொடர்பான அறிவு மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும்	கணக்காய்வு அவதானிப்புகளை கவனம் செலுத்தி 2024 இன் மனித வள அபிவிருத்தித் திட்டத்தில் உள்ள குறைபாடுகளை இனங்காணப்பட்டுள்ளதுடன் அந்த குறைபாடுகளை சரி செய்து 2025 ஆம் ஆண்டிற்காக மனிதவள அபிவிருத்தி திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கையின் பிரகாரம் மனித வள அபிவிருத்தி திட்டம் தயாரிக்க வேண்டி இருந்ததுடன் திறன் இடைவெளிகளை இனங்கண்டு பயிற்சி திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும்.

	அந்த அந்த பதவிகளுக்கு உரியதாக தொடர்ந்தும் திறன்களை அடைந்து கொள்ளும் நோக்கில் பயிற்சி தேவைகள் பகுப்பாய்வு செய்யப்படாமல் பயிற்சித் திட்டமும் தயாரிக்கப்பட்டிருந்தது.		
(உ)	2024 இன் மனிதவள அபிவிருத்தி திட்டத்தில் திறன் இடைவெளிகளை நிரப்புவதற்காக திட்டமிடப்பட்ட ஊழியர்களின் இயலளவு மற்றும் அவர்கள் திறனைக் கட்டி எழுப்புவதற்காக தொடர்ச்சியாக தேவையான திட்டமிடப்பட்ட விடயம் தொடர்பாக ஏனைய 07 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் 2024 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு 2024 இன் பயிற்சி செயல் முன்னேற்றத்தின் பிரகாரம் செயலாற்றல் பிரகாரம் அலுவலக உதவியாளர் சேவை உத்தியோகத்தர்களுக்காக எந்த ஒரு பயிற்சி நிகழ்ச்சித் திட்டமும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.	2024 ஆகஸ்ட் மாதம் வரையில் 15 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் அந்த ஆண்டில் சேர்க்கப்பட்ட கிராம சேவை உத்தியோகத்தர்களுக்காக 15 நாள் சேவை முன் பயிற்சியும் நடாத்தப்பட்டிருந்தது. 2024 ஆம் ஆண்டில் தேர்தல் ஆண்டாக இருந்தமையால் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்துவதற்கு முடியாது இருந்ததுடன் 2025 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்த ஆலோசனை வழங்கப்படும்.	சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் பயிற்சி தேவைகளை நிறைவேற்றுகின்ற முறையில் பயிற்சி திட்டத்தை தயாரித்தல் மற்றும் நிழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல் மேற்கொள்ளப்படல் வேண்டும்.